KALKI
5.11.2006 ரூ.8.00
80 பக்கங்கள்

கல்கி

குடும்பத்துடன் படிக்க...

கலைஞர் விவகாரம்... பல்டி ஏன்?



"நான் சந்நியாசி அல்ல!"

கொலை செய்பவன், வெடிகுண்டு வைப்பவன் ஆகியோரைப் பற்றித் தான் மீடியா முழுக்க எழுதறீங்க. இப்போ பிறக்கிற குழந்தைகள் இதே சூழலில் வளர்ந்தால், 'சமூக விரோதியாக இருந்தாதான் வாழ முடியும்' என்ற எண்ணத்தில் வளர்வார்கள். எனவே மீடியா ஆக்கபூர்வமாக மாறணும். சமுதாயத்தில் எல்லா பிரிவிலும் தரம் தாழ்ந்த நிலை இருக்கும்போது, காவி கட்டும் பிரிவிலும் இருக்கிறது. ஆனால் மீடியா எல்லோருடைய முகத்திலும் கரியைப் பூச நினைக்கிறது. காவி கட்டுபவன், தான் யோக்கியன் என்று நிரூபித்துக் கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறான்."

காஞ்சி மடத்தைப் பற்றி உங்கள் அபிப்ராயம்?

"நான் அங்கே போனதில்லை. எனக்கு அதைப் பற்றி first hand knowledge கிடையாது. மீடியாவில் ஏதேதோ எழுதினாங்க. அப்புறம் அதைத் திடீர்னு விட்டுட்டாங்க. 'ரசம்' கிடைக்கலை போலிருக்கு. நான் ஏற்கெனவே சொன்னதுபோல் மீடியாவின் நடத்தை மாறணும். டாக்டர்கள், அரசியல்வாதிகள், நீதிபதிகள், ஆன்மிகவாதிகள், பத்திரிகையாளர்கள் ஆகியோர், தங்கள் பணியை ஒரு தொழிலாக நினைக்காமல் அர்ப்பணிப்பு உணர்வோடு தத் தமது துறையில் இருக்கணும். என்னைப் பற்றியும் மோசமா மீடியா எழுதினாங்க. என்னைப் பற்றிக்கூட அபாண்டமாக எழுதினார்கள். ஆனால், பொய்யும் ஆர்ப்பாட்டமும் நிலைத்து நிற்காது."

இப்போது மதங்களைப் பயன்படுத்தி, அரசியல்வாதிகள் வோட்டு அறுவடையில் இறங்குகிறார்கள். இந்த நிலையில் மத நல்லிணத்துக்காக நீங்கள் பாடுபடலாமே!

"எல்லா மதங்களைச் சேர்ந்தவர்களும் எங்கள் மையத்தில் இருக்காங்க. ஒருவருக்கொருவர் வேறுபடுத்திப் பார்க்கும் தன்மை விலகணும். 'எல்லாமே எனக்குள் ஒன்றுதான் என்று உணரத் தொடங்கினாலே வேற்றுமைகள் அடிபட்டு, நல்லிணக்கம் ஏற்படும். மதங்கள்கூட இந்த அடிப்படையில் தான் உருவாக்கப் பட்டிருக்கு. மற்ற விஷயங்களைப் போல இதையும் நாம் மறந்துவிட்டோம்."

ஆனால் உங்கள் தியான சென்டரில் பிரம்மாண்டமான லிங்கத்தைப் பிரதிஷ்டை செய்திருப்பது இந்து மதத்தின் குறியீடாகத்தானே இருக்கிறது?

"எல்லாவற்றுக்கும் எது அடிப்படையாக இருக்கிறதோ அதைத்தான் ஈஷா என்று சொல்கிறோம். அது உருவமில்லாத நிலையில் ஈஷா; உருவம் கொடுத்தால் ஈஸ்வரன். நமக்கு இன்னமும் உருவமில்லாத தன்மையைப் புரிஞ்சுக்கிற பக்குவம் முழுதாக வரவில்லை. எனவே உருவ வெளிப்பாடுதான் வழக்கமாகிவிட்டது. உருவைத் தாண்டி அதற்கு அப்பால் பார்க்கணும். உருவமில்லாத ஈஷாவை புரிஞ்சுக்கிறது, கிரகிக்கிறதுதான் நமது நோக்கம். ஆனா அந்தப் பக்குவம் முழுதாக மக்களிடம் வராததால்தான் இந்த ஏற்பாடு! இதற்கும் மதத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. இஸ்லாமியர்கள், கிறித்துவர்கள் என்று நிறைய பேர் சென்டருக்கு வருகிறார்கள்."

நீங்கள் எதிர்காலத்தில் நேரிடையாக அரசியலுக்கு வருவீர்களா, அல்லது தேர்தலின்போது 'இவரை ஆதரியுங்கள்' என்று யாரையேனும் அடையாளம் காட்டுவீர்களா?

"மதவாதிகள் சிலர் 'இவருக்கு வோட்டுப் போடு, அவருக்கு வோட்டுப் போடு' என்று ஜனநாயகத்தைக் கொலை செய்கிறார்கள். ஒரு மனிதன் யாருக்கு வோட்டுப் போடணும் என்று தானே தீர்மானிக்க வேண்டும். நாம் அரசியலுக்கு வரமாட்டோம். ஆனால் மக்கள் இந்த விஷயத்தில் முடிவெடுக்கும் திறனை வளர்க்க உதவுவோம்."

தியானம் குறித்த ஜகியின் வாதங்கள் அடுத்த வாரம்...

- ப்ரியன்

அட்டை மற்றும் படங்கள் : ஸ்ரீஹரி

"நான் சந்நியாசி அல்ல!"

ஜகி வாசுதேவ் கோவையில் ஈஷா யோகா சென்டரை ஆரம்பித்து இருபத்தைந்து வருடங்களாகின்றன. இன்று அது கிராமப் புத்துணர்வு இயக்கம், பசுமைக் கரங்கள் என்று கிளை பரப்பி நிற்கிறது. சமீபத்தில் சென்னைக்கு வந்திருந்த ஜகி வாசுதேவைச் சந்தித்தபோது, நமது கேள்விகளுக்குத் தயக்கமின்றி பதில் அளித்தார்.

உங்களைச் சத்குரு என்கிறார்கள். ஆனால் சமூகப் பணிகளே பெரும்பாலும் உங்கள் வேலைத் திட்டமாக இருக்கின்றன. நீங்கள் ஆன்மிகவாதியா, இல்லை சமூக ஆர்வலரா?

"அது ஆன்மிகமோ, சமூக சேவையோ - எது செய்தாலும் மனித குலத்தின் நன்மைக்காக என்ற நோக்கம் மட்டுமே அடிப்படையாக இருக்க வேண்டும். ஆனால் இந்த நோக்கம் மறக்கப்பட்டு வருகிறது. நான் மறக்கவில்லை; அப்படி மறக்காததை மக்களுக்கு நினைவுபடுத்துகிறேன். அதை ஆன்மிகம் என்கிறீர்களா? இல்லை... ஒரு மனிதனை 'உள்' நிலையில் ஆனந்தமயமாக்க முயற்சி செய்கிறேனே, அது ஆன்மிகமா? இப்போது எல்லோருக்கும் ஒரு முத்திரை குத்தி விடுவதை வாடிக்கையாக்கிக் கொண்டு விட்டீர்கள். நான் ஆன்மிகத்திலும் இல்லை; சமூக ஆர்வலரும் இல்லை. மனித குலத்துக்கு நன்மை செய்கிற சக மனிதனாகத்தான் நான் இருக்கிறேன். இந்த மனித குலத்துக்கு நன்மை செய்ய பலர் ஆவலாக இருக்கிறார்கள். அவர்கள் எண்ண ஓட்டம் 'நான்' என்ற சுயநலத்திலிருந்து தேசம், உலகம் என்று பொது நலமாக விஸ்தரித்துள்ளது. இந்த எல்லையை மேலும் விரிவுபடுத்தவே நான் முயன்று வருகிறேன். இதை ஆன்மிகம் என்று சொல்வீர்களா அல்லது சமூக நலன் என்று சொல்வீர்களா?... ஒன்றும் சொல்ல வேண்டாம்."

யோகம், தியானம் என்று துவங்கிய நீங்கள், இப்போது கிராமப் புத்துணர்வு இயக்கம், பசுமைக் கரங்கள் என்று பணிகளை விரிவுபடுத்தியிருக்கிறீர்கள். துவக்கிய நோக்கம் பாதை மாறிவிட்டதா?

"நோக்கம் சரியாகத்தான் போய்க் கொண்டிருக்கிறது. பூகோள ரீதியாக ஓர் இடத்தில் கவனத்தைச் செலுத்தி மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும் என்று நினைத்துத் தமிழ்நாட்டைத் தேர்ந்தெடுத்தோம். பல நூறு அழைப்புகள் இருந்தாலும் வேறு எங்கும் போகவில்லை. தமிழ்நாட்டில் பெரிய நகரம், நடுத்தரவுன், பெரிய கிராமம், சிறு கிராமம் என்று ஊடுருவி, இன்று 2432 கிராமங்களில் எங்கள் அமைப்பின் பணிகள் நடந்து வருகின்றன. அங்கேயெல்லாம் ஈஷா யோகா, மக்களின் மன-வாழ்க்கை நிலையில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. நாங்கள் ஏற்படுத்தி வரும் மாற்றத்தைப் பற்றிப் பெரிய அளவில் வெளியில் தெரியவில்லை. இப்படி சமூக, மனித குல தேவைகளை நிறைவேற்றுவதில் ஈடுபட்டு வருவதால் ஆன்மிகத்தை மறந்துவிட்டீர்களா என்று கேட்கிறார்கள். எங்கும் சுபிட்சம் நிலவினால், நான் என் ஆன்மிகப் பணியிலேயே முழுக் கவனத்தையும் செலுத்தியிருப்பேன். இங்கே வயிற்றுப் பசியோடு இருப்பவனுக்குத் தியானம் சொல்லித் தர முடியுமா? மக்களின் யதார்த்த வாழ்க்கையை மாற்றாமல் எந்த ஆன்மிகப் பணியிலும் இறங்க முடியாது. எனவே திட்டமிட்டுப் படிப்படியாகச் செல்கிறோம். பாதையில் எந்த மாற்றமும் இல்லை."

உங்களைப் போல பணிகளில் ஈடுபட்டு வரும் அமைப்புகள் Corporate பாணியில் மக்கள் தொடர்பு அதிகாரியை வைத்து விளம்பர வீச்சாய் அசத்துகின்றனவே! இது சரியா?

"முதலில் நம்மீது ஒரு நம்பிக்கை உண்டாகும்படி நாம் நடந்து கொள்ள வேண்டும். இதற்கு ஒரு வழிமுறை இருக்கிறது. இருபத்தைந்து வருடங்களாக ஈஷா இருக்கிறது. ஆனால் இருபது வருடங்கள்வரை எந்த மீடியாவையும் நான் தொடர்பு கொண்டதில்லை. இப்போது அப்படியிருக்க முடியவில்லை. கிராமப் புத்துணர்வு இயக்கத்தைத் துவங்கியவுடன் மீடியாவைப் பயன்படுத்திக் கொள்வது தவிர்க்க முடியாததாகிவிட்டது. பெரிய அளவில் ஆதரவு கிடைக்காவிட்டால் இந்த இயக்கத்தைத் திட்டமிட்டபடி நடத்திச் செல்ல முடியாது."

சமீபத்தில் முதல்வரை வைத்து பசுமைக் கரங்கள் நிகழ்ச்சியைத் துவங்கியதும் இந்த அடிப்படையில்தானா?

"கலைஞரை நீங்கள் அரசியல் தலைவராகப் பார்க்கிறீர்கள். நாங்கள் அவரை முதலமைச்சராகப் பார்க்கிறோம். அரசியல் என்பது தேர்தலோடு முடிந்து போக வேண்டும். அதன்பின் முதலமைச்சராக வருபவர், ஜனநாயக முறையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, மக்களுக்கு நன்மை செய்ய வருகிறார். அந்தப் பணியில் அவர் ஈடுபடும்போது அவருக்கு நாம் உதவ வேண்டும். இதை மக்களுக்குப் புரியவைக்கத்தான் அந்த நிகழ்ச்சியை முதல்வரைக் கொண்டு நடத்தினோம். கலைஞர் என்றல்ல; யார் முதல்வராக இருந்தாலும் இதே அணுகுமுறையைக் கையாளுவோம்."

காவி அணிபவர்களின்மீது மக்களுக்கு நம்பிக்கை போய்க் கொண்டிருக்கிறபடியால்தான் நீங்கள் காவி அணிவதைத் தவிர்க்கிறீர்களா?

"காவி என்பது சந்நியாசிகள் கட்டிக் கொள்வது. நான் சந்நியாசி அல்ல. ஏதோ சிலர் செய்த தவறுகள் காரணமாக, ஒரு தவறான அபிப்ராயம் பொதுவாக உருவாகிக் கொண்டு வருகிறது. இது பூதாகாரமாகத் தெரிய, மற்றொரு காரணம் மீடியா. பாலியல் பலாத்காரம் செய்பவன்,